## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 4-5 - வீற்றிருந்து
**(எம்பெருமான் தனது பெருமை எல்லாம் தோன்றக் காட்சி அளித்துக் கலக்க, ஆழ்வார் அவனை மங்களாஷாசனம் பண்ணித் துயர் தீர்ந்து மகிழ்தல்)**

3051 * வீற்றிருந்து ஏழுலகும் * தனிக்கோல் செல்ல வீவில்சீர் *
ஆற்றல் மிக்காளும் அம்மானை * வெம்மா பிளந்தான் தன்னை **
போற்றி என்றே கைகளாரத் * தொழுது சொல் மாலைகள் *
ஏற்ற நோற்றேற்கு * இனி என்ன குறை எழுமையுமே? 1

3052 மையகண்ணாள் மலர்மேல் உறைவாள் * உறை மார்பினன் *
செய்ய கோலத் தடங்கண்ணன் * விண்ணோர் பெருமான் தன்னை **
மொய்ய சொல்லால் இசை மாலைகள் ஏத்தி * உள்ளப் பெற்றேன் *
வெய்ய நோய்கள் முழுதும் * வியன் ஞாலத்து வீயவே 2

3053 வீவில் இன்பம் மிக * எல்லை நிகழ்ந்த நம் அச்சுதன் *
வீவில் சீரன் மலர்க்கண்ணன் * விண்ணோர் பெருமான் தன்னை **
வீவில் காலம் இசை மாலைகள் ஏத்தி * மேவப் பெற்றேன் *
வீவில் இன்பம் மிக * எல்லை நிகழ்ந்தனன்[1] மேவியே 3

3054 மேவி நின்று தொழுவார் * வினை போக மேவும் பிரான் *
தூவியம் புள்ளுடையான் * அடலாழி அம்மான் தன்னை **
நாவியலால் இசை மாலைகள் ஏத்தி * நண்ணப் பெற்றேன் *
ஆவியென்னாவியை * யானறியேன் செய்தவாற்றையே 4

3055 ஆற்ற நல்ல வகை காட்டும் அம்மானை * அமரர் தம்
ஏற்றை * எல்லாப் பொருளும் விரித்தானை எம்மான் தன்னை **
மாற்ற மாலை புனைந்து ஏத்தி * நாளும் மகிழ்வெய்தினேன் *
காற்றின் முன்னம் கடுகி * வினை நோய்கள் கரியவே 5

3056 கரியமேனி மிசை * வெளிய நீறு சிறிதே இடும் *
பெரியகோலத் தடங்கண்ணன் * விண்ணோர் பெருமான் தன்னை **
உரிய சொல்லால் இசை மாலைகள் ஏத்தி * உள்ளப் பெற்றேற்கு *
அரியதுண்டோ எனக்கு? * இன்று தொட்டும் இனி என்றுமே 6

3057 என்றும் ஒன்றாகி * ஒத்தாரும் மிக்கார்களும் * தன்தனக்கு
இன்றி நின்றானை * எல்லா உலகும் உடையான் தன்னை **
குன்றம் ஒன்றால் மழை காத்த பிரானைச் * சொல் மாலைகள் *
நன்று சூட்டும் விதி எய்தினம் * என்ன குறை நமக்கே? 7

3058 நமக்கும் பூவின் மிசை நங்கைக்கும் * இன்பனை * ஞாலத்தார்

---
[1] நிகழ்ந்தன

தமக்கும் * வானத்தவர்க்கும் பெருமானை ** தண்தாமரை
சுமக்கும் * பாதப் பெருமானைச் சொல் மாலைகள் * சொல்லுமாறு
அமைக்க வல்லேற்கு * இனியாவர் நிகர் அகல்வானத்தே? 8

3059 வானத்தும் வானத்துள் உம்பரும் * மண்ணுள்ளும் மண்ணின் கீழ்த்
தானத்தும் * எண்திசையும் * தவிராது நின்றான் தன்னை **
கூனற்சங்கத் தடக்கையவனைக் * குடமாடியை
வானக்கோனைக் * கவி சொல்ல வல்லேற்கு * இனி மாறுண்டே? 9

3060 உண்டும் உமிழ்ந்தும் கடந்தும் இடந்தும் * கிடந்தும் நின்றும் *
கொண்ட கோலத்தொடு வீற்றிருந்தும் * மணங்கூடியும் **
கண்டவாற்றால் தனதே * உலகென நின்றான் தன்னை *
வண்தமிழ் நூற்க நோற்றேன் * அடியார்க்கு இன்பமாரியே 10

3061 * மாரி மாறாத தண்ணம்மலை * வேங்கடத்து அண்ணலை *
வாரி வாறாத பைம்பூம்பொழில் சூழ் * குருகூர் நகர் **
காரி மாறன் சடகோபன் * சொல் ஆயிரத்து இப்பத்தால் *
வேரி மாறாத பூமேல் இருப்பாள் * வினை தீர்க்குமே 11

**அடிவரவு:** வீற்று மைய வீவில் மேவி ஆற்ற கரிய என்றும்
நமக்கும் வானத்து உண்டும் மாரி தீர்ப்பார்